தேதி: <தேதியைச் செருகவும், தேதி மாதம் வருடம்>

| | | |
|---|---|---|
| பாலிசி எண் | : | <பாலிசி எண்> |
| காப்பீடு பெறுபவர் | : | <காப்பீடு பெறுபவரின் பெயர்> |
| பாலிசியின் நிலை | : | <பாலிசியின் நிலை விளக்கம்> |
| அடுத்த பாலிசி வருடாந்திரத் தேதி | : | <அடுத்த பாலிசி வருடாந்திரத் தேதி, தேதி மாதம் வருடம்> |
| அடுத்த பிரீமியம் தவணைத் தேதி | : | <அடுத்த பிரீமியம் தவணைத் தேதி, தேதி மாதம் வருடம்> |

**<திட்ட விளக்கம்> (<திட்டக் குறியீடு>) -க்கான காப்பீட்டுக் கட்டணங்களின் திருத்தம்**

அன்பார்ந்த, மதிப்புமிக்க வாடிக்கையாளரே,

ஜூரிச் லைஃப் இன்ஷூரன்ஸ் மலேசிய பெர்ஹத் (ZLIMB) -க்கு நீங்கள் அளித்து வரும் தொடர்ந்த ஆதரவுக்கு நன்றி.

மலேசியாவில் மருத்துவ மற்றும் சுகாதாரக் கவனிப்புச் செலவுகள் அதிகரித்து வருவது ஒரு வளர்ந்து வரும் கவலையாக உள்ளது என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம், தனியார் சுகாதார சேவைகளின் விரிவாக்கத்தாலும், தொடர்ந்து மருத்துவரீதியான பணவீக்கம் அதிகரிப்பதாலும் மருத்துவ மற்றும் சுகாதாரத் துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

செலவைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நாங்கள் தொடர்ந்து முயற்சிகளையும், பல்வேறு முன்னெடுப்புக்களையும் மேற்கொண்ட போதும் கூட, இந்தச் செலவுகள் வருடந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. கட்டணங்கள் நியாயமானவை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, நாங்கள் மேற்கொள்ளும் முன்னெடுப்புகளில் மருத்துவக் கட்டணத்தை ஆழமாகப் பகுப்பாய்வு செய்வதுடன், பல்வேறு மருத்துவமனைகளில் உள்ள கிளைம்களுக்கான செலவை மதிப்பாய்வு செய்து, ஒப்பீடு செய்கிறோம் ZLIMB -இல் உங்களுக்கு நீண்ட காலப் பாதுகாப்புக் கிடைப்பதை உறுதிசெய்வதே எங்கள் அர்ப்பணிப்பாகும். இந்த அர்ப்பணிப்பின் ஒரு அங்கமாக, உங்களுக்குத் தேவையான மருத்துவக் கவரேஜை நீங்கள் பராமரிப்பதை உறுதிப்படுத்துவதற்காக, உங்கள் காப்பீட்டுக் கட்டணங்களை நாங்கள் சுறுசுறுப்பாக நிர்வகிக்கிறோம். இதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு, உங்கள் மருத்துவத் திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டணங்களையும், பிரீமியம்களையும் நாங்கள் திருத்தி அமைப்போம் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

டிசம்பர் 20, 2024 அன்று, மருத்துவத் திட்டங்களுக்கான இடைக்கால நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பான பேங்க் நெகாரா மலேசியாவின் (BNM) அறிவிவிப்பைத் தொடர்ந்து, அதிகப் பயன்பாடு மற்றும் மருத்துவக் கிளைம்கள் பணவீக்கத்துடன் தொடர்பாக அதிகரித்து வரும் செலவுகளால் ஏற்படும் சவால்களை நிர்வகிப்பதில் எங்கள் பாலிசிதாரர்களுக்கு உதவும் அர்ப்பணிப்புடன் நாங்கள் இருக்கிறோம்.

இந்த மாற்றத்தின் போது உங்களுக்கு உதவுவதற்காக, ஐந்து வருட காலத்திற்கு உங்கள் காப்பீட்டு கட்டணங்களில் படிப்படியான அதிகரிப்பை (இணைப்பு 1 ஐப் பார்க்கவும்) நாங்கள் செயல்படுத்துவோம். **நீங்கள் தற்போது 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவராகவும், மிகக் குறைவான திட்டத்தில் சேர்ந்துள்ளவராகவும் இருப்பதால், இந்த அதிகரிப்பு ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டு, அதை ஈடு செய்வதற்கு உங்களுக்கு அதிக காலம் கிடைக்குமாறு செய்யப்படும்.**

உங்கள் வயதுக்கு ஏற்ப மாறுபடும் <கட்டண முறை விளக்கம்> க்கான புதிய மருத்துவ பிரீமியத்திற்கு கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்.

| ஆண்டு | வயது | தற்போதைய மருத்துவ பிரீமியம்[2 3] (RM) | புதிய மருத்துவ பிரீமியம்[4] | | | புதிய மருத்துவ பிரீமியம் அமலுக்கு வரும் தேதி |
|---|---|---|---|---|---|---|
| | | | சதவீதம் அதிகரிப்பு (%) | தொகை அதிகரிப்பு[2] (RM) | இறுதி பிரீமியம்[2] (RM) | |
| 1 | <Age at Anniversary> | <C-Amt1> | ஒத்தி வைக்கப்பட்டது | ஒத்தி வைக்கப்பட்டது | **<Amt1>** | <Effective Date1> |
| 2 | <Age+1> | <C-Amt2> | <Percent1%> | <Inc1> | **<Amt2>** | <Effective Date2> |
| 3 | <Age+2> | <C-Amt3> | <Percent2%> | <Inc2> | **<Amt3>** | <Effective Date3> |
| 4[1] | <Age+3> | <C-Amt4> | <Percent3%> | <Inc3> | **<Amt4>** | <Effective Date4> |
| 5[1] | <Age+4> | <C-Amt5> | <Percent4%> | <Inc4> | **<Amt5>** | <Effective Date5> |
| 6[1] | <Age+5> | <C-Amt6> | <Percent5%> | <Inc5> | **<Amt6>** | <Effective Date6> |

[1]டைமுறைப்படுத்தப்பட வேண்டிய பல்வேறு செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினால் ஏற்படும் விளைவைப் பொறுத்து, நான்காம் ஆண்டிலிருந்து அதிகரிக்கும் தொகையானது மதிப்பாய்விற்கும், திருத்தத்திற்கும் உட்பட்டது.

[2]பிரீமியம் தொகையில், பொருந்தினால், சுமை மற்றும் சேவை வரியும் அடங்கும்.

[3] உங்கள் அசல் ஒப்பந்த விதிமுறைகளின்படி, பொதுவாக உங்களுக்கு வயது ஆக ஆக திருத்தத்திற்கு முந்தைய உங்கள் **தற்போதைய வருடாந்திரக் காப்பீட்டுக் கட்டணம்** அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[4] **திருத்தப்பட்ட வருடாந்திரக் காப்பீட்டுக் கட்டணத்தில்** ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பு, உங்களுக்கு வயது ஆக ஆக காப்பீட்டுக் கட்டணங்களில் செய்யப்படும் அதிகரிப்புகளுக்குப் பொருந்தாது.

மேலும் தகவலுக்கு, பின்னிணைப்பைப் பார்க்கவும்:

இணைப்பு 1: அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ)

வெவ்வேறு நடைமுறை தேதிகளைக் கொண்ட முழு வருடாந்திர பிரீமியம் அட்டவணைகளுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் http://www.zurich.com.my/ml210 விவரங்களுக்கு.

உங்களுக்கு மேலும் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து எங்கள் வாடிக்கையாளர் சேவை பராமரிப்பு எண்ணை 1-300-888-622 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் (மருத்துவ மறுவிற்பனை குறித்த விசாரணைகளுக்கு #6 ஐ அழுத்தவும்), அல்லது callcentre@zurich.com.my என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும். மாற்றாக, உங்கள் வெல்த் பிளானரைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது அருகிலுள்ள சூரிச் லைஃப் இன்சூரன்ஸ் மலேசியா பெர்ஹாட் கிளையைப் பார்வையிடலாம்.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள,
**ZURICH LIFE INSURANCE MALAYSIA BERHAD**

**Pauline Teoh**
தலைமை நிர்வாக அதிகாரி

வெல்த் பிளானர் : <WP குறியீடு><வெல்த் பிளானர் பெயர்>
தொடர்பு எண் : <WP தொடர்பு எண் >
தலைமை முகமை மேலாளர் : <CAM குறியீடு><CAM பெயர்>
கிளை : <WP கிளை விளக்கம்>

குறிப்பு:

1. இந்த அறிவிப்புக் கடிதத்தின் உள்ளடக்கமானது, கிடைத்துள்ள விவரங்களின் அடிப்படையில் அமைந்துள்ளதுடன், **<கடிதம் உருவாக்கப்பட்ட தேதி, தேதி மாதம் வருடம்>** முதல் இந்தப் பாலிசியில் செய்யப்பட்ட எந்த மாற்றத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ளாது.
2. இந்தக் கடிதத்தின் உள்ளடக்கத்தையும், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளையும் பஹாசா மலேசியா, சீன மொழி அல்லது தமிழில் காண http://www.zurich.com.my/ml210. ஆங்கிலம், பஹாசா மலேசியா, சீன மொழி மற்றும் தமிழ் பதிப்புகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், ஆங்கிலப் பதிப்பே இறுதியானதாகும்.
3. உங்கள் பாலிசி விவரங்களைக் காண, எங்கள் வாடிக்கையாளர் போர்ட்டலான http://MyZurichLife.com.my -இல் உள்நுழையவும் அல்லது கீழேயுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

http://MyZurichLife.com.my

**வாடிக்கையாளர் சேவை மையம்**
தரைத் தளம், பிளாக் B, பிளாசா ஜூரிச், 12, ஜாலான் கெலெங்காங், புக்கிட் டமன்சாரா, 50490 கோலாலம்பூர்.
*(மற்ற கிளைகளுக்கு, நிறுவனத்தின் இணையதளத்தைப் பார்க்கவும்)*

1300-888-622 callcentre@zurich.com.my www.zurich.com.my Customer portal : www.myzurichlife.com.my